
# ஞானசம்பந்தம்


தருமபுர ஆதீனத் திங்கள் வெளியீடு

சித்திரபானு ௵ மாசி மீ — 1943 மார்ச்சு.

இவ்வாதீனத்துக்குச் சொந்தமான
திருக்கற்குடி மாமலைத் தோற்றம்

திருச்சிற்றம்பலம்

போர்மலி திண்சிலை கொண்டு பூதக ணம்புடை சூழப்
பார்மலி வேடுரு வாகிப் பண்டொரு வர்க்கருள் செய்தார்
ஏர்மலி கேழல் கிளைத்த வின்னொளி மாமணி யெங்கும்
கார்மலி வேடர் குவிக்குங் கற்குடி மாமலை யாரே.

திருச்சிற்றம்பலம்.

—திருஞானசம்பந்த சுவாமிகள்.

குருபாதம்

# திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான

## தேவஸ்தானங்களில் நடைபெற்ற

## சமயப்பிரசாரங்கள்

வேளூர் ஸ்ரீ வைத்தியநாதஸ்வாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ செல்வ முத்துக்குமரஸ்வாமி உற்சவத்தில் கிருத்திகையன்று (9—2—43) அண்ணாமலைநகர் சித்த வைத்தியம் திரு. Dr. S. G. சுந்தரம்பிள்ளை அவர்கள் "வைத்திலிங்கமும் வைத்தியமும்" என்னும் பொருள் பற்றி விரிவுரையாற்றினார்கள்.

## 12-2-43-ல் நிகழ்த்தப்பட்டவை

சீகாழி ஸ்ரீ பிரமபுரீஸ்வரசுவாமி தேவஸ்தானத்தில் "இணையடி நீழல்" என்னும் பொருள்பற்றித் திருவாரூர் போர்டு உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர், வித்துவான், திரு. S. தண்டபாணி தேசிகர் அவர்கள் அரியதோர் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேஸ்வரசுவாமி தேவஸ்தானத்தில் "கயிலைநாயனைப்பெரியார்" என்னும் பொருள்பற்றிச் சீகாழி ஸூதரன் மிஷன் உயர்தரப்பள்ளித் தமிழாசிரியர் வித்துவான், திரு. D. சுந்தரேச ஆசாரியார் அவர்களைக்கொண்டு சொற்பொழிவு செய்விக்கப்பட்டது.

திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீஸ்வரசுவாமி தேவஸ்தானத்தில் நாகை நாயுடால் உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர், வித்துவான், திரு. M. சண்முகதேசிகர் அவர்கள் "அப்பரும் ஐயாறும்" என்னும் பொருள் பற்றிஓர் விரிவுரை ஆற்றினார்கள்.

திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேஸ்வர சுவாமி தேவஸ்தானத்தில் "சிவஞானபோத முதற்சூத்திரம்" என்னும் பொருள்பற்றித் தருமபுர ஆதீன சைவப்பிரசாரகர், திரு. மீ. சுந்தரம் பிள்ளை அவர்கள் ஓர் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

திருத்துவளை ஸ்ரீ தியாகராஜ சுவாமி தேவஸ்தானத்தில் (20-2-43) மகத்தன்று திரு. மீ. சுந்தரம்பிள்ளை அவர்களைக்கொண்டு "சிவஞானபோத இரண்டாஞ் சூத்திரம்" என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவு செய்விக்கப்பட்டது.

உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

மெய்கண்ட தேவ னருளாற் சிவாகம மெய்ப்பொருடேர்ந்
தையமின் மெய்யடி யாருக் களித்ததை யாய்ந்தவர்போற்
பையவுள் வந்து பொருண்மாறு பாடு பகர்ந்தவர்க்கே
செய்ய பொருளவன் செப்பிய வாறிவண் செப்புதுமே.

—சித்தாந்த நிச்சயம்.


| | | |
|---|---|---|
| மலர் 2 | சித்திரபானு௵ மாசி௴ 1943—மார்ச். | இதழ் 4 |

இதழாசிரியர்:—

தருமபுர ஆதீனம், ஒடுக்கம் - சிவகுருநாதத் தம்பிரான்.


## உள்ளுறை


1. சிவாகமசீலம். 129

2. பத்தித் தனித்தெப்பம்—
திரு. R. சண்முகசுந்தரஞ் செட்டியார் அவர்கள்,
சென்னை.

3. தெய்வமணக்குஞ் செய்யுள்—
திரு. திருஞானசம்பந்தமுதலியார் அவர்கள்,
தேவஸ்தான ஓதுவார், வலிவலம். 138

4. திருவுந்தியார் உரைநடை—
திரு. க. வச்சிரவேல் முதலியார் அவர்கள், B.A., L.T.,
பச்சையப்பன் உயர்தரப்பள்ளி, காஞ்சிபுரம். 141

5. திருவைந்தெழுத்தின் பெருமை—
வித்துவான், திரு. G. சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள்,
M.A., B.L., தமிழ் விரிவுரையாளர், அண்ணாமலைப்
பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர். 144

6. திருநெறி விளக்கம்—
திரு. மு. அருணாசலம் அவர்கள், M. A., சென்னைப்
பல்கலைக்கழகத் தமிழ் ஆராய்ச்சியாளர், சென்னை. 148

7. குருஞானசம்பந்தர்—
திரு. S. தண்டபாணி, ஆதீனப் பாடசாலை மாணவன். 153

8. Siddantha Saivam and its Merits—
Sri A. Muthiah Pillai, B. A., B. L.,
Palamcottah. 155

9. The Four Paths —
Late J. M. Nallaswami Pillai, B.A., B.L. 159

10. The Sacred Sports of Siva—
(Extract from Siddhantha Deepika.) 161

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

குருபாதம்

# ஞானசம்பந்தம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க வாடுவாய் பிஞ்ஞகா பிறப்பிலீ
கொன்றையம் முடியினாய் கூடலால வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (திருஞா-தே)

திருச்சிற்றம்பலம்

---

## சிவாசார சீலம்

(99-ம் பக்கத் தொடர்ச்சி.)

அருச்சுனர் இடரினுந் தளரினுந் தவறாது சாங்காறும் சிவாகமவிதிப்படி சிவபூசை செய்து வந்தனர் என்பது பாரதத்திலே பதின்மூன்றா நாட் போரில் அபிமன்னியு இறந்தானாக அதுபோது அருச்சுனர் பலவாறு வருந்திப் பின்னர் என்மகனைக் கொன்றவனை நாளைப் பகற்பொழுதிற் கொல்லேனாயின் இன்ன இன்ன தீச்செயல் செய்தோர் எய்துங் கதியிற் சேர்வேனாவேன் எனச் சபதங்கூறி, அன்று மாலையில் கண்ணனொடுங் கயிலையாத்திரை செல்லுங்கால் சென்ற வழியிலே அருச்சுனர் இளைத்து மெய்யயர்ந்து வீழ்தலும், கண்ணபிரான் அவரை அங்கையினால் அணைத்துச் சோர்வைமாற்றி, "ஐய! நீ அடிசிலும் உண்டிலை; நீரும் அருந்திலை; பசிக்கனல் கொளுந்தி வீழ்ந்தனை; உன்மகன்மேல் வைத்தஅன்பினாற் காட்டக்

நாட்ட உலகியலைக்கண்டிலை" என்றுகூறி, "கனிவகைகளும் கரும்பிரதங்கலந்த மாவும் உள இவற்றைப் பசிக்கனல் மாற அருந்துக" என்று பரிந்துரைத்தலும், உண்பதன்முன் மலர்பறித்திட்டு உண்ணும் நியதியில் வழுவாத அருச்சுனர் 'யான் இன்னும் உமாபதியைப் பூசை செய்திலேனே எங்ஙனம் இவற்றை உண்பேன்" என்றார். அதுகேட்ட கண்ணன், "சிவபெருமான் தாபர சங்கமங்கள் என்ற இரண்டு உருவிலும் நின்று இங்குள்ளார் செய்யும் பூசையை ஏன்றுகொண்டருளுவர். ஆதலின் என்னைச் சிவனுருவாகப் பாவித்துப் பூசையை முடித்து நிவேதனஞ் செய்த பழமுதலிய பிரசாதங்களை யுண்டு களைநீங்குதி" என்றான். அருச்சுனர் அங்குள்ள வனமலர்களைப் பறித்துத் துழாய்மாலை யணிந்த மாயன்வடிவையே சிவனுருவாகப் பாவித்துச் சிவாகமவிதிப்படி சிவபூசையை முடித்துச் சிவப்பிரசாதத்தை அருந்தி இளைப்பு நீங்கினார். இவற்றை வில்லிபாரதம் பதின்மூன்றாம் போர்ச்சருக்கத்தில்,

ஏகிய நெறியிடை யிளைத்து வாசவற்
காகிய குமரன்மெய் யயர்ந்து வீழ்தலும்
போகியி னறிதுயில் புரியு நான்மறை
யோகியங் கையினணைத் துயக்க மாற்றியே.

உண்டிலை யடிசிலு முண்ணுந் தீம்புனல்
கொண்டிலை பசிக்கனல் கொளுந்தி வீழ்ந்தனை
மண்டிலை வேலினாய் மகவி னன்பினாற்
கண்டிலை யுலகியல் காட்டக் காட்டவே.

மாங்கனி வாழையின் கனிவருக் கையின்
தீங்கனி கன்னலிற் செய்த மாவுள
வேங்கனற் பசியுநின் விடாயு மாறவே
ஈங்கினி தருந்துதி யேந்த லென்னவே.

சரிந்தவர் சரிவறத் தாங்கு நாயகன்
பரிந்திவை யுரைத்தலும் பாவை பங்கன்மேற்
புரிந்தில னின்னமும் பூசை யென்றனன்
வரிந்தவெஞ் சிலைக்குமண் மதித்த வீரனே.

மருவரு கானக மலரினு லெமைப்
பொருவரு பூசனை புரிதி யையநீ
இருவரு மொருவரே யென்ப தின்றுபோய்
அருவரை யவனடி யடைந்து காண்டியே.

என்றரி யியம்பலு மிரும ருங்கினும்
நின்றநன் மலர்கொடு நிகரில் கேள்வியான்
மன்றலந் துழாய்முடி மாயன் மேன்மனம்
ஒன்றியே சிவாகம வுரையிற் சாத்தினன்.

சாத்தினன் றெழுதுபின் றலைவன் றுண்மலர்த்
தீர்த்தமுங் கனிகளுந் தெவிட்ட வுண்டுதன்
காத்திரந் தேறினன் கருத்துந் தேறினன்
பார்த்தன்முற் றவப்பயன் பலித்த வாறரோ.

எனவரும் பாடல்களான் அறியலாம். முதனாட் போரின் தொடக்கத்திலே அருச்சனருக்குக் கீதைநூல் செவியறிவுறுத்த கீதாசாரியனான கண்ணபிரான் அக் கீதைநூலின் இறுதியத்தியாயத்திலே,

सर्वगुह्यतमं भूयः शृणु मे परमं वचः ।
इष्टोऽसि मे दृढमिति ततो वक्ष्यामि ते हितम् ॥
मन्मना भव मद्भक्तो मद्याजी मां नमस्कुरु ।
मामेवैष्यसि सत्यं ते प्रतिजाने प्रियोऽसि मे ॥
सर्वधर्मान्परित्यज्य मामेकं शरणं व्रज ।
अहं त्वा सर्वपापेभ्यो मोक्षयिष्यासि मा शुचः ॥

"அருச்சுன! நீ எனக்கு உறுதியான நண்பனாய் இருக்கிறாய். ஆதலால் உனக்கு மீளவும் நல்லது கூறுகின்றேன். அனைத்தினும் உட்பொருளாகி முடிவாகி யுள்ள என்மொழியைக் கேட்டி. என்பாலே உள்ளம் வைத்து என்பாலே அன்புடையனாய் என்னையே இரந்து கொண்டிருப்பாயாக. என்னையே வணங்குக. என்னையே எய்துக. என்பாலே பற்றுடையை ஆதலின் உனக்கு உண்மையாக உறுதி கூறுகின்றேன். எல்லாத்தருமங் களையும் கைவிட்டு நீ என்னையே புகலாக அடைதி. நான் எல்லாப் பாவங்களினின்றும் உன்னை விடுவிப்பேன்

வருந்தற்க" என்று கூறியிருப்பவும், அக்கீதாசாரியன் கூறியதன் கருத்தைத் தெளிவாக அறிந்த அருச்சுனர் தாம் மேற்கொண்டொழுகி வந்த சிவாகமசீலத்தைப் பேரிடர் வந்த காலத்தும் வழுவாது குறிக்கொண் டொழுகியதன் பயனாகத் திருக் கண்ணப்பராய் அவ தரித்து ஊணும் உறக்கமும்இன்றி அன்புப்பிழம்பாகிய வடிவொடு நின்று நாளாறிற் கண்ணிடந் தப்பிக் காளத்திநாதர் கழலடி கூடினர். இவர்தம் அன்பின் பெருமையும், அவர்செய்த பூசை சிவாகமவிதிப்பொருள் பற்றிச் சிவகோசரியார் செய்த பூசையோடு ஒத்து விளங்கிப் பெரும்பேறு அளித்தது என்பதும்,

" வேயனையதோளுமையொர்பாகமதுவாகவிடையேறிசடைமேல்
தூயமதி சூடிசுடு காடினட மாடிமலை தன்னை வினவில்
வாய்கலச மாகவழி பாடுசெயும் வேடன்மல ராகுநயனம்
காய்கணை யினாலிடந் தீசனடி கூடுகா ளத்திமலையே.

கண்ணப்ப னொப்பதோ ரன்பின்மை கண்டபின்
என்னப்ப னென்னொப்பி லென்னையுமாட் கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்கருணைச்
சுண்ணப்பொன் னீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ.

பொருட்பற்றிச் செய்கின்ற பூசனைகள் போல்விளங்கத்
தெருட்பற்ற சேரடி வாய்க்கலச மூனமுதம்
விருப்புற்று வேடனார் சேடறிய மெய்குளிர்ந்தங்
கருட்பெற்று நின்றவா தோணோக்க மாடாமோ."

என்பன முதலிய திருமுறைப்பாடல்களால் இனிது விளங்கும். இச்சரிதத்தால் அருச்சுனர் முற்பிறப்பிலே செய்த சிவபூசை மெல்வினையெனப்படும் சிவதன்ம மாகிய சிவாகமசீலம் என்பதும், அதன் பயனாகி எல்லை யின்றி முறுகிவளர்ந்த அன்பினால் பிற்பிறப்பிலே திண்ணனாராகிச் செய்த பூசை வியனுலகினோர்க்குச் செய்தற்கரிய வல்வினை எனப்படும் சிவதன்மமாம் என்பதும் தெளிந்து கொள்ளலாம்.

(வரும்)

குருபாதம்

# பத்தித் தனித் தெப்பம்

[திரு. R. சண்முகசுந்தரஞ் செட்டியார், B. A., சென்னை.]

**பத்தித்தனித்தெப்பம்** என்பது நம்பியாண்டார் நம்பிகள் அருளிய ஆளுடையபிள்ளையார் திருத்தொகையுள் வருவதோர் அருந்தொடர். தெப்பம் என்பது நீர் நிலைகளுள் மிதக்கும் பொருளாகும். அஃது அதனைத் தாங்கும் நீரினும் இலேசானது. தனித்து மிதக்கமாட்டாத கனமுள்ள பொருள்களைத் தன்மீது கொண்டு சேர்ப்பிக்கச் சாதனமாகுந் திறத்தது. நீரினால் சிலமாறுதல்கள் உருவத்திலடையினும், மிதக்கின்ற செயலில் மாறுபடாது நிற்பது. இங்குக் குறிக்கப்படுந் தெப்பம் பத்தித் தெப்பமாகும். பத்தியின் றன்மைகளை அறிந்து அது தெப்பமாகும் நிலையைப் பின்னர் ஆராய்வாம்.

பக்தி என்ற வடசொல் பத்தி என்று தென்றமிழினின்றது. அஃதே அன்பு எனப்பொருள்படும். அன்பினிலக்கணத்தைப் பேருரை யாசிரியர்கள் "தொடர்புடையார்மாட்டுக் காட்டப் பெறுவதூஉ மென்றும், தொடர்பில்லாதார்மாட்டுக் காட்டப் பெறுவ தூஉ மென்றும்" விளக்கினர். பின்னையது அருளென்று கூறப்பட்டது. அதனை அன்பீன் குழவி என்றுரைத்தனர் செந்நாப் புலவராய திருவள்ளுவனார். எனவே இவ்விரண்டும் அன்பும் அன்பின் காரியமுமாம். எடுத்துக்கொண்ட பத்தியாகிய அன்பு என்பது இறைவன் மாட்டுக்காட்டத்தகும் நேயம். தம்மினும் சிறியோர் மாட்டெழுகின்ற அன்பன்று; தம்மினும் எளியோர் மாட்டெழுகின்ற அருளன்று; தம்மினும் வலியோரிடத்தும், பெரியோரிடத்தும் அவர்செய்த வுதவிக்கு நன்றிகாட்டும் அன்பன்று. இறைவனைநோக்கி அவனது பெருங்கருணைத் திறத்தைக்கருதி உள்ளத்திலெழும்நேய வுணர்ச்சி அன்பாகும். ஆகவே உயிர்களை இறைவ

னிடத்துச் சேர்ப்பிக்கும் சாதனமாக அன்பு அமை கின்றது. உயிர்கட்குப் பத்தியே தெப்பமாம்.

தெப்பம் நீர்நிலைகளுள் மிதக்கும் பொருளாம். அது போன்று பத்தி எங்கு மிதப்பதெனின் அது பிறவிக் கடலுள் மிதப்பதாகும். கடலினுக்குள்ள தன்மைகள் பிறவியினிடத்து முண்டு. கடலில் அலைகள் ஒன்றன் பின் ஒன்ருக ஓயாது வீசிக்கொண்டிருக்கும். காற்று வேகமாய் நீரினை யலைத்துக் கொண்டிருப்பது கண்கூடு. நீர்வாழ்வனவாகிய சுறாமீன்கள் அங்குமிங்கும் உலாவிக் கொண்டிருப்பன. பிறவிக்கடலுள் துன்பமாகிய அலை கள் முறை முறை துயரஞ் செய்வன. கற்பில்லாப் பெண்டிராகிய கடுங்காற்றி னலைப்பால் மயக்கம் நேரும் காமமாகிய சுறாமீன்கள் உயிர்களைப்பற்றி மூழ்கச் செய்வன. பிறவியும் கடலும் ஒத்தநிலையின எனுங் கருத்தை விளக்குவான் மணிவாசகனுரும்,

தனியனேன் பெரும்பிறவிப் பௌவத் தெவ்வத்
 தடந்திரையா லெற்றுண்டு பற்றென் றின்றிக்
கனியைநேர் துவர்வாயா ரென்னுங் காலாற்
 கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்
டினியென்னே யுய்யுமா றென்றென் றெண்ணி
 யஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின் றேனை
முனைவனே முதலந்த மில்லா மல்லற்
 கரைகாட்டி யாட்கொண்டாய் மூர்க்க னேற்கே.

என்றருளினர். இங்கு உயிர்கள் பிறவிக் கடலுள் படுந்துயரமும், திகைப்பும், புணையைப்பற்றி இறைவன் திருவடிகள் சேருந்தன்மையும் உருவகிக்கப்பட்டன. உயிர்கள் அன்பாகிய தெப்பத்தை நாடவேண்டுமென் பது அவசியமாகும். உயிர்கள் யாவும் பருமைப்பொருள் கள். தாமே பிறவிக்கடல்மீது செல்வதெனின் அத னுள் அவையாழ்வதே கதியாகும். நீரினும் கனமுள்ள பொருள்கள் நீரினில் மிதப்பதில்லை. இருவினைகளால் உயிர்கட்குப் பாரம் நேர்கின்றது. இருவினைகள்தான்

பிறவிக்குக் காரணம். 'இருவினையிற் போக்குவரவு புரிய' என்பது சிவஞானபோதம். இருவினைவழியே செல்லுங் குணத்தை உயிர்களுடையன. அவற்றின் வன்மையைப் பூங்குன்றனர் புறநானூற்றில்,

* * * மின்னொடு

வானந் தண்டுளி தலைஇ யானாது
கல்பொரு திரங்கு மல்லற் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோ லாருயிர்
முறைவழிப் படூஉம் மென்பது திறவோர்
காட்சியிற் றெளிந்தன மாதலின்.

எனக்குறித்தமை காண்க. உயிர்கள் இருவினைகளால் பருமைப் பொருள்களாய்த் தாமே செல்லுதற்கு ஆற்றலற்றன. அன்பாகிய புணைமீது பொருந்தி இறைவன் றிருவடி நெடுங்கரை சேரவல்லன. அன்பாகிய பத்தி, பிறவிக்கடலுள் மிதவையாய் விளங்கி உயிர்களை யீர்த்துச் செல்லும் பேராற்றலுடையது. எனவே உயிர்களுக்கு இன்றியமையாது வேண்டப்பெறுவது பத்தித் தெப்பம் என்றருளினார் ஆசிரியர் நம்பியாண்டார் நம்பிகள். அத்தெப்பத்தின் சிறப்பை மேலும் விளக்குவான் தனித் தெப்பம் என்றார். இங்குத் தனிமை யென்றது ஒப்பற்ற நிலையினை. நீர் நிலைகளுள் மிதவைகளில் கொண்டு செல்லப்படும் பருமைப் பொருள்கள் கரைசேர்வதற்கு முன்னமே சிறிது தப்பி நீரினுள் மூழ்கினுலும் மூழ்கும். அங்ஙனமின்றி, அன்புப் புணைகளிலே சென்றவுயிர்கள் இறைவனைச் சார்ந்தனவே யொழிய, பிறவிக்கடலுள் விழுந்தன என்றறிவிக்கும் சரிதம் யாண்டுங் கேட்டிலோம். புணைகளில் பொருள்கள் வாளாகிடக்க, காற்றலைக்க, கோல்தள்ள தெப்பங்கள் மெல்லென கரைவந்து சார்வதியல்பு. பொருள்களுக்குப் புறத்தேயுள்ளது தெப்பம். பத்தி உயிர்களுள்ளத்தே விளங்குவது. உயிர்கள் தத்தம் முள்ளத்தே இறைவனைச் சிந்தித்தலும், பத்தி கசிந்துருகும். அன்பு அரும்புந்திறத்தை,

"திருவினர் போதினனும் திருமாலுமோர் தெய்வமுன்னித்
தெரிவினுற் காணமாட்டர் திகழ்சேவடி சிந்தைசெய்து
பரவினர்"

என்று திருஞானசம்பந்தசுவாமிகளாலும்,

பித்தனைப்பெருந் தேவர் தொழப்படும்
அத்தனையணி யாமாத்தூர் மேவிய
முத்தினையடி யேனுயி னையுமும்
பத்தி வெள்ளம் பரந்தது காண்மினே

என்று அப்பமூர்த்திகளாலும் அறிவிக்கப்பட்டமை காண்க. தம்மீது சுமந்து செல்லப்படும் உயிர்களுள் ளத்தே யிருப்பதுமன்றி, யாவரையும் விடாது திருவடி நெடுங்கரையைச் சேர்ப்பிக்குஞ் செயலால் தனிமை பெறப்பட்டது. அஃதல்லாது, புறச்சமயத்தினர் தங்கள் தங்கள் சமயத்தில் முத்திக்குச் சாதனமாகக் கருதிய பொருள்களினும் மேம்பட்டதெனக் குறிக்கவே பத்தித் தனித் தெப்பம் என்றாரென்னலுமாம்.

இத்துணைச் சிறப்பிற்றாய இவ்வருந்தொடரினை யுடைய ஆளுடையபிள்ளையார் திருத்தொகை என்னும் அருணூலினுக்குத் திருஞானசம்பந்த சுவாமிகளே பாட்டுடைத் தலைவர். அவர்களை நம்பியாண்டார் நம்பிகள்

"கத்தித் திரிபிறவிச் சாகரத்து ஆழாமே
பத்தித் தனித்தெப்பம் பார்வாழத் தந்தபிரான்."

எனப்போற்றினர். பத்தித்தனித் தெப்பத்தை உலகுய்யும்படி திருஞானசம்பந்த சுவாமிகள் தந்தார் என்றுணர்த்தப்படுகின்றது. சுவாமிகள் நிலவிய காலம் ஏழாவது நூற்றாண்டின் முற்பகுதி யென்ப. அக்காலத்து ஆதிக்கமொடுங்கிய பௌத்தசமயமும், அரசர்களையும் அவர் தம் நாடுகளையும் தம் வசமே யாக்கவல்ல சமணசமயமும் விளங்கின. இச்சமயங் களின் கொடுமையோங்க, சைவத்தின் சீர்மை குன்றி

யது. மனம் பொருத சிவபாதவிருதயரது அருந்தவத்திற்கிரங்கி இறைவன் றிருவருளால் திருஞானசம்பந்தர் திருவவதாரஞ் செய்தார். இப்பெருந்தகையாரை,

'அவம்பெருக்கும் புல்லறிவி னமண்முதலாம் பரசமயப்
பவம்பெருக்கும் புரைநெறிகள் பாழ்படநல் லூழிதொறுந்
தவம்பெருக்குஞ் சண்பையிலே தாவில்சரா சரங்களெலாஞ்
சிவம்பெருக்கும் பிள்ளையார் திருவவதா ரஞ்செய்தார்'

எனத் தெய்வச் சேக்கிழார்பெருமான் போற்றுகின்றார். இங்குச் 'சிவம் பெருக்கும் பிள்ளையார்' என்பதனைப் "பத்தி பெருக்கும் பிள்ளையார்" எனக் கூறலுஞ் சிறப்பாகும். நம்பியாண்டார் நம்பிகளும் ஆளுடைய பிள்ளையார் திருத்தொகையுள்,

"பத்திச் சிவமென்று பாண்டிமா தேவியொடுங்
கொற்றக் கதிர்வேற் குலச்சிறையுங் கொண்டாடும்
அற்றைப் பொழுதத் தமணிரிடு வெந்தீயைப்
பற்றிச் சுடுகபோய்ப் பாண்டியனை என்னவல்லான்"

என மொழிந்துள்ளனர். "அன்பே சிவமா யமர்ந்திருப் பாரே'. என்ற திருமூலர் திருமந்திரமும் நினைவுகூர்க. பௌத்தரும், சமணரும் பத்திப்புணையைப் பற்றாத நிலையினர். அவர்கள் முத்திநிலையை யடைதற்கு அமைத்துக் கொண்ட சாதனங்களைச் சிறிதுணர்வோம்.

(வரும்)

---

இரும்பைக் காந்தமும், கயிறு அறுந்த ஊசலைத் தரையும் விகாரமின்றி நின்று இழுக்கும். அங்ஙனமே ஆன்மா இந்திரியங்களைத் தனக்கு வேறாகக் காணவே முதல்வன் அதனைத் தன்வழிப்படுத்தி நிற்பன். இதனை ஆன்மா அறிவது சிவரூபம்.

—ஸ்ரீமத் உமாபதி சிவாசாரியார்.

உ

சிவமயம்

# தெய்வமணக்குஞ் செய்யுள்

[திரு. திருஞானசம்பந்த முதலியார் அவர்கள், வலிவலம்.]

(110-ம் பக்கத் தொடர்ச்சி)

இனி நீரானது தனக்கெனவோர் குணங் குறிகளின்றி, தான்சார்ந்த இடத்தின் குணங் குறிகளின்மயமாய் இணைந்து விளங்குதலொப்ப, அருட்சத்தியாம் இறைவியும் அவ்வவ் வான்மாக்களின் கன்மானுகுணங்களின் நிலைகளுக்கேற்ப நின்றிலங்கிடுமாறுங் கண்டுகொள்க. "எத்திறம் நின்றானீசன் அத்திறம் அவளும் நிற்பள்" என்னும் சிவஞானசித்தித்திருவாக்கு இங்கே கருதத்தக்கது. இறைவன் அன்பர் நினைந்த வடிவொடு விரைந்து சேரும் அருட்பெருங் குணமுடையனாதலானும், அவனதருட்பெருங்கோலநிலைகள் அனைத்தும் "நந்தம் கருமேனி கழிக்கவந்த கருணையின் வடிவ" நிலைகளேயாதலானும், அக்கருணைதானும் ஆன்மாக்களின் பரிபாக நிலைகளுக்கேற்பப் பயன் அளிக்கவல்ல நியதியொடுநின்று நினைவதாகலானும் இறைவனோடு அவ்வத்திறத்தின் ஒத்து ஒடுங்கியைந்து நிற்கும் அருட்சத்தியது நிலையும், அவ்வருளொடு எவ்வாற்றானும் பிரிப்பின்றித் தாதான்மியமாய் உடன்கலந்து வுலகினை ஆக்கியும் அளித்தும் போக்கியும் அருள்தரவல்ல புனிதனை இலங்கும் இறைவனது கலையும் ஒன்றேயாமென்பது உணர்ந்து கொள்க.

இம்மையுலகிற்கு இன்றிமையமையாத நீர்போலும் அம்மையுலகில் அருள் என வற்புறுத்தி, இறைவனது அருளொளியாம் பராசத்தியின் பாற்படும் நம்மனோரை ஆற்றுப்படுத்தல் இங்கே பெறக்கிடக்கின்றது. "அவளால் வந்த ஆக்கம் இவ்வாழ்க்கை எல்லாம்" என்னும் அருணந்தி சிவத்தின் திருவாக்கினையும் சிந்தித்துக்

கொள்க. இறைவனது சங்கற்ப மூகிழ்ப்பாம் அருட் சத்தியினியக்கமே சகல சராசரங்களின் தோற்றங் கட்கும் காரணமாமென்பது சைவசித்தாந்த முடிபாம் என்க.

காவிரியாறு பிறப்பியலான் அம்மையாரையும், தண்ணளியான் அம்மையாரது அருட்குணத்தினையும் நிகர்ப்பதாமென்பது வெள்ளிடைமலையாம். இங்ஙனம் ஆற்றின் சிறப்பினை எடுத்துரைப்பான் புகுந்த ஆசிரியர் சேக்கிழார் பெருமான் இறைவனது அருள் வெள்ளத்தி னிலக்கணமுணர்த்தி ஆன்மாக்கள் அனை வரும் அப்பரமானந்தப் பழங்கடலுட்புக்கு இனிக்கு மாறு செய்தமை அருமையின் அருமை யுடைத்தாதல் காண்க.

சோறு மணக்கும் மடங்களெலாம்
    தூய்மை மணக்குஞ் சிந்தையெலாம்
சுவண மணக்கும் ஆடையெலாம்
    தொங்கல் மணக்குந் தோள்களெலாம்
சேறு மணக்குங் கழனியெலாஞ்
    செல்வ மணக்கும் மாடமெலாந்
தென்றல் மணக்கும் மேடையெலாந்
    தெய்வ மணக்குஞ் செய்யுளெலாம்
நீறு மணக்கும் நெற்றியெலாம்
    நெய்யே மணக்குங் கறிகளெலாம்
நெருப்பு மணக்குங் குண்டமெலாம்
    நேய மணக்கும் வீதியெலாம்
சாறு மணக்குங் குன்றத்தூர்த்
    தலைவா தாலோ தாலேலோ
சகலா கமபண் டிததெய்வச்
    சைவா தாலோ தலேலோ.

—சேக்கிழார் பிள்ளைத்தமிழ்

அதுவேயுமன்றிப் "பெரியபுராணம் பரமசிவனது அருட்பத்தி ஞானநெறிச் சென்ற வித்தகரான உண்மை நாயன்மாரது கருமஞான அருளொழுக்கம் சரித்திரத்தில் வைத்துணர்த்துந் திருவருட் காவியமாம். இதன்கண் அகம் புறமென்று இருதிறத்துப் பதினென்கு திணைவழக்கும் மனுமுதலிய ஆன்றோர் வகுத்த வருணாச்சிரம வழக்கும், புறநெறிச் சமயப் பூர்வபக்க வழக்கும், அகநெறிச் சமய ஆசாரவழக்கும், வைதிக சைவ மெய்ந்நெறி வழக்கும், உண்மைச் சரியை வழக்கும், உண்மைக் கிரியை வழக்கும், உண்மை யோக வழக்கும், உண்மை ஞான வழக்கும், குருலிங்க சங்கம வழிபாட்டு வழக்கும், ஒட்பமும் திட்பமும் நுட்பமும் பொருந்தி உவமனின்றுமாறு ஓதப்பட்டன." என்று திராவிடப் பிரகாசிகை ஆசிரியராகிய ஸ்ரீமத் சபாபதி நாவலரவர்கள் கூறிப் போந்தார்.

ஒப்பரிய தொண்டர்தம் மருமையும் பெருமையும்
உவக்குமவ ரவர்செய்கையும்
உவமையில் லாச்செய்கை நுட்பமுந் திட்பமும்
உம்பர்கோ னருள்தட்பமுந்
தப்பரிய செந்தமிழ்த் தொடைநடையு மடையுந்
தவாப்பொரு ளணிச்சிறப்புந்
தமிழ்மறை யடங்குபல மந்தணமும் வெள்ளிடைத்
தவிரும்வெற் பெனவிளங்க
வெப்பரிய முழுமதிக் குடைநிழற் றனபாயன்
மேயவவை யகநயந்து
வியந்துமெய்ப் பாட்டிஞெடு பாராட்டி மகிழமேன்
மேல்விரித் தருளிய பிரான்
செப்பரிய குன்றையம் பதியருண் மொழித்தேவ
செங்கீரை யாடியருளே
திருத்தொண்டை நன்னாட்டு வேளாளர் குலதிலக
செங்கீரை யாடியருளே.

—மகாவித்துவான் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை.

உ

சிவமயம்

# திருவுந்தியார் உரைநடை

[காஞ்சிபுரம், திரு. க. வச்சிரவேல் முதலியார் அவர்கள், B. A., L. T.]

(112ம் பக்கத்தொடர்ச்சி)

## 13 முதல் 16 வரையுள்ள உந்திகள் *

இவற்றான் நிராதார யோகத்தினல் விளையும் பயனும், ஆண்டு நிகழும் இடையூறுகளைக் களையுமாறும் உணர்த்துகின்றார்:—

பொழிப்பு:- மேற்கூறிய முறையான் தாரணைக்கண் நின்ற உணர்வு 'பரஞ்சோதி' எனப்படும் பதியைத் தலைபட்டுச் செயலற்று நிற்பின் அது சிவத்தைத் தலைப்படும். அவ்விடம் ஆராய்ச்சி நிகழ்தற்குரிய இடமன்று, (13)

கரணங்களைச் சார்ந்துநின்று உலகப்பொருள்களை அறிந்துவருதலாகிய பற்றையறுக்கவல்ல திருவருளாகிய பற்றுக்கோட்டை, மேற்கூறிய உபாயத்தான் அறிந்து,

---

* ஓட்டற்று நின்ற வுணர்வு பதிமுட்டித்
தேட்டற் றிடஞ்சிவ முந்தீபற
தேடு மிடமதன் றுந்தீபற. (13)

பற்றை யறுப்பதோர் பற்றினைப் பற்றிலப்
பற்றை யறுப்பரென் றுந்தீபற
பாவிக்க வாராரென் றுந்தீபற. (14)

கிடந்த கிழவியைக் கிள்ளி யெழுப்பி
யுடந்தை யுடனேநின் றுந்தீபற
வுன்னையே கண்டதென் றுந்தீபற. (15)

உழவா துணர்கின்ற யோகிக ளொன்றேடுந்
தழுவாம னிற்பரென் றுந்தீபற
தாழ்மணி நாவேபோ லுந்தீபற. (16)

தாரகமாகக்கொண்டு அன்புசெய்து நிற்பின், அத் திருவருளுக்கு முதலாகிய சிவபிரான் ஏகதேசப்பட்டு நிற்றற்கேதுவாகிய கரணப்பற்றைக் களைந்து விடுவன்.

மலசக்திகள் இங்கு ஒருவாறு கெடுதலின் ஓரிடத்து ஒரு காலத் திருந்தாங்கிருந்து மூவிடத்து முக்காலத்தும் இயல்பாக விரிந்த பொருள்கள் எல்லாவற்றையும் காண்டலாகிய யோகக் காட்சியும் உளதாகும்.

முதல்வனது இப்பொதுநிலை விளக்கம் இங்ஙனம் உளதாக அருளான் அறிந்துசெய்யும் முயற்சியான் நிகழுமேயன்றிப் பாவனை மாத்திரையாற் செய்யும் ஏனை யோகமுயற்சிகளான் நிகழாதென்க. (14)

மறைந்து உண்ணின்று உபகரித்துவரும் முதல்வனது சிற்சத்தி, ஆசான் அருளால் மேற்கூறிய உபாயங்களினின்று விளங்கப்பெற்று, அதனோடுடனாய் நின்று கண்டது உன் சொரூபத்தையே; முதல்வன் சொரூபம் இதற்கு மேம்பட்டது. (15)

குறிப்பு: கிடந்த கிழவியைக் கிள்ளியெழுப்பி (அவ்) உடந்தையுடனே நின்று கண்டது உன்னையே (உந்தி 15) என்பது உரை நடை. யோகமுயற்சிகளான் கரணங்களைத் தமக்குக் கருவியாய் வேறு நிற்பன என்றறிந்து நீங்கினபின் விளங்குவது ஆன்ம சொரூபமேயன்றிச் சிவம் அன்றென்பது 15-ஆம் உந்தியான் உணர்த்தப்பட்டது. 'இந்நிலையில் முக்காலவுணர்ச்சி முதலியன உயிர்க்கு உளவாதல்பற்றி நான் பிரமம் என முனைப்பு நிகழின் அது பசுத்துவ வாதனைபற்றி உளதாவதெனக்கண்டு அதனைக்களைக', என அறிவுறுத்தியதூஉமாயிற்று. இவ்வுந்தியின் பொருளைக் "கருவியாமனமும் ..., ஒருவி ஆன்மாவின் உண்மை உணர்ந்தவர் தருமிது..., பசுஞானம் பின் சிவஞானந் தனக்கு மேலாம்" என்னுஞ் சிவஞான சித்தியார் திருவிருத்தத்திற்கு மாதவச் சிவஞான யோகிகள் அருளிச்செய்த உரையாற் றெளிந்து கொள்க.

பொழிப்பு:— மேற்கூறியபடி உடந்தை எனப்பட்ட திருவருளோடு உடனாய் நின்று மூவிடத்தும் முக்காலத்தும் உள்ள பொருள்களைக் கண்டுணரும் யோகிகள் (உழவாமல் உணர்கின்ற யோகிகள்) அங்ஙனம் உணரும் அறிவைப்பற்றின் மீளஅறிவு பலவாகி ஏகதேசப்பட நேருமாகலின், அதனைப்பற்றாமல் கீழே வைக்கப்பட்ட மணியின் நாவைப்போலத் திருவருளிலேயே தம் அறிவைக்கொடுத்துத் தன்முனைப்பின்றி நிற்பர். (16)

குறிப்பு, 13, 14, 15, 16 ஆம் உந்திகளின் கருத்தை விளக்குவன 'ஒட்டற்று நின்ற' என்பது முதல் "அறிவறிவாய் நிற்கில்" என்பதுவரையுள்ள வெண்பாக்கள். (களிறு. 26-32),

(வரும்)

உ

சிவமயம்

சிவபிரான் உலகத்தைப் பலகாலுஞ் சிருட்டித்து ஆன்மாக்களுக்கு வினைப்பயன்களை யூட்டுவார். கடைசியாக அவைகளுக்குப் புண்ணியமிகுதியால் முத்திநெறியிற் சேரத்தக்க நல்ல காலம் வரும். அப்பொழுது அவர் அவைகளுக்குப் பூர்வ வாசனை விசேஷத்தால் சிவஞானம் சற்று விளங்கும்படியாகச் செய்து உயர்ந்த சைவப்பிறப்பைக் கொடுப்பார். அரும்பு மலராகும்வரைப் பல நிலைகளை அடைதல்போல ஆன்மாக்கள் இப்பிறப்பையடையும் வரை கீழ்ச்சமயப் பிறவிகளிலிருந்து படிப்படியாக ஏறுதல் வேண்டும். எல்லாப் பிறவிகளும் ஒழிந்து முத்தியைப் பெறும் பக்குவமாகிய இருவினையொப்பும் மலபரிபாகமும் இப்பிறவியில் தான் வாய்க்கும். இவ்விருவினையொப்பு மலபரிபாகம் நிகழுங் காலத்தில் முற்பிற்பாடின்றிச் சத்திநிபாதமும் அவைகளுக்கு ஏற்படும்.

—போற்றிப்பஃறொடை

உ

குருபாதம்

# திருவைந்தெழுத்தின் பெருமை

[வித்துவான், திரு. G. சுப்பிரமணியப்பிள்ளை அவர்கள், M. A., B. L.,]

(116-ம் பக்கத் தொடர்ச்சி)

தொன்றுதொட்டு வழக்கியல் முறைமைக்கேற்ப ஆசிரியன் வாயிலாகக் கேள்விமுறையாலன்றி அறிதற் கரிதாகிய திருவைந்தெழுத்திற்கும் அதிதெய்வம் சிவம். சிவம் முதல் மலம் ஈறாக ஐந்து காரணமும் அடைவே நிற்கும் தன்மை உணரவேண்டிய தொன்றாகும். பின்னர் அம்மந்திரம் இதயத்திலே நீங்காதபடி வடுப்படச் செய்து அதினுண்டாம் திளைப்புக்கும் ஆசைப்பற்றுண்டாக்க வேண்டும். அது எவ்வாறு என்பதை,

"உயிரா வணமிருந் துற்று நோக்கி
உள்ளக் கிழியின் உரு வெழுதி
உயிரா வணஞ்செய்திட் டுன்கைத் தந்தால்
உணரப் படுவாரோடு ஒட்டி வாழ்தி"

என்னும் திருத்தாண்டக அடிகளால் அறியலாம். எங்ஙனம் அது கைகூடுமெனில், நெஞ்சுள் நடுவாக உயிரடையாளமாகிய யகாரத்தை நிறுத்தி மேலே நாவில் வகாரத்தையும், நெற்றி நடுவண் சிகாரத்தையும் நிறுத்தி அவற்றோடுகூடும் உணர்ச்சியை உண்டாக்க வேண்டும். இன்னும் தெளிவுபடக் கூறின் நெற்றி, நாக்கு, இதயம், உந்திக்கமலம், மூலாதாரம் ஆகிய ஐந்து கரணத்திலும் முறையே சிவயநம எனும் திருவைந்தெழுத்தையும் அமைத்து, மேல்நோக்கியே உயிர்ப்பொடுக்கித் தியானித் திருக்கவேண்டும். அப்பொழுது சிகாரம் சோதிச்சுடர்விட்டு ஒளிகான்று நிற்கும். அதனைவிட்டு நீங்காத சத்திவடிவான வகாரம் நின்றெரிதீபமொக்கும். அதற்குள்ளே கனற்பொறி

நிறம் பெற்று நின்ற யகாரமாகிய ஆன்மாவை வகார வொளியானது பற்றி மேலாய்மிருந்த சிவத்தின் பாலிழுத்துய்க்கும். அஃதாவது ஞானம் கையுதவி, பிறப் பிறப்புத் துன்பத்தை நீக்கி, ஞேயத்தின்பாலுய்க்கும். சம்பந்தர் பஞ்சாக்கரப் பதிகத்தில்,

"ஊனில் உயிர்ப்பை யொடுக்கி யொண்சுடர்
ஞான விளக்கினை யேற்றி நன்புலத்
தேனை வழிதிறந் தேத்து வார்க்கிடர்
ஆன கெடுப்பன வைந்தெ ழுத்துமே."

என்று கூறுவதை அறியலாம். இந் நிலையிலேதான் இறைவன் பசுவாகிய ஆன்மாவைக் கொண்டு, பதியா கிய தன்னைத் தந்து, பேரின்பவாரிதியிற் புகச்செய்து, இரண்டற்ற உணர்ச்சியைக் கொடுத்து ஆன்மாவோடு கூடிநிற்பான்.

அறிவுடை ஆன்றோர்களெல்லாம் சிவத்தைத் தந் தையாகவும், அருட்சத்தியைத் தாயாகவும் கொண்டு போற்றினர். தாயானவள் முதலிற் காட்டியபின்பே ஒருயிர் தன் தந்தையை அறிதல் உலகவழக்காகும். அவ்விதமே அருளாகிய தாய் காட்டவே, சிவமாகிய தந்தையை ஆன்மா அறியமுடியும். இதுவே அருளின் உதவிகொண்டு சிவத்தை அடைவதாகும். இக் கருத் தைக்கொண்டே பட்டினத்தடிகளும்,

"மாயநட் போரையு மாயா மலமெனு மாதரையும்
வீயவிட் டோட்டி வெளியே புறப்பட்டு மெய்யருளாந்
தாயுடன் சென்றுபின் தாதையைக்கூடிப் பின்தாயை மறந்து
ஏயுமதே நிட்டை என்றான் எழிற்கச்சி யேகம்பனே."

என்று கூறியுள்ளார். மறைப்புச் சத்தியாகிய திரோதத் தைக் குறிக்கும் நகாரமும் அருட்சத்தியாகிய வகாரமும் சிவசத்தி ஒன்றேயாம். ஊனநாடகத்தை ஒழித்து முத்தியை நாடலுறுவார்க்குத் திரோதம் அருளில்ஒடுங்கி அருட்சத்தியே மேற்பட்டு நிற்கும். அதை நகாரம் வகாரத்தில் ஒடுங்குவதென்ப. சத்தி சிவத்தில் ஒடுக்கம். ஆகையால் வகாரம் சிகாரத்தில் ஒடுங்கும். ஆன்மா

அருள் வயப்படவே மலம் வலியற்றொடுங்குதலின் மகாரம் யகாரத்தில் ஒடுங்கும். அருள்வயப்பட்ட ஆன்மா சிவத்தில் ஒடுங்கும். எனவே யகாரமும் சிகாரத்தில் ஒடுங்கும். இம்முறையே ஐந்தெழுத்தும் சிகாரத்தில் ஒடுங்குதல் அறிந்து போற்றற்பாலது. இதையே திருமூலரும்,

"அங்கமும் ஆகம வேதம தோதினும்
எங்கள் பிரானெழுத் தொன்றில் இருப்பது
சங்கைகெட் டவ்வெழுத் தொன்றையுஞ் சாதித்தால்
அங்கரை சேர்ந்த அருங்கல மாமே."

என்று குறிப்பித்தார்.

இத் திருவைந்தெழுத்தையும் மனம், மொழி, செய்கைகள் ஒன்றிப்பொருந்த உளமகிழ்வோடு ஓதிப் பயிலல் வேண்டும். இதை அப்பர் தேவாரம்,

"கருவாய்க் கிடந்துன் கழலே நினையுங் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்றன் நாமம் பயின்றேன் உனதருளால்
திருவாய்ப் பொலிய சிவாய நமவென்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதிநீ பாதிரிப் புலியூர் அரனே."

என்று தெளிவுபடுத்துகிறது. 'சிவாயநம என்று' என்பதில் மனமும் மொழியும் செய்யும் காரியங்களும், 'நீறு அணிந்தேன்' என்பதால் மெய்யின் தொழிலும் ஒன்றுபடுதல் காணலாம். திருவெண்ணீற்றையும் பஞ்சாட்சரம் என்று கூறும் வழக்குண்மையால் திருவைந்தெழுத்திற்கும், திருவெண்ணீற்றுக்கும் ஒரு நெருங்கிய தொடர்பு இருப்பதைக் காணலாம். கருநிறச் சாணத்தைத் தீயாற் சுட்டுத் தூய வெண்ணீறாக்கித் தரித்தல், மெய்ஞ்ஞானத்தால் இருளாய மலத்தைக் களைந்து வெள்ளிய அருளொளி நிறைந்த சிவத்தன்மையடைதலையே குறிக்கும். இன்னும் ஒரு கரிக்கட்டியில் கங்கை வைத்து பொறிப் பறக்க ஊத ஊத அது எப்படி கருமை நிறம் மாறித் தழலுருப்பெறுகின்றதோ அதேபோல் திருவைந்தெழுத்தை ஓத ஓத, அம்மந்திரத்தில் விளங்குகிற அருட் சத்தியால் மலத்தன்மை நீங்கிச் சிவத்தன்மை அடையலாம். இதை அப்பர் தேவாரம்,

“சந்திரற் சடையில்வைத்த சங்கரன் சாமவேதி
அந்தரத் தமரர்பெம்மான் ஆன்நல்வெள் ளூர்தியான்றன்
மந்திரம் நமச்சிவாய ஆகநீ றணியப் பெற்றால்
வெந்தறும் வினையும்நோயும் வெவ்வழல் விறகிட்டன்றே.”

என்பதால் அறியலாம். இவ்வருமைத்தேவாரத்தில் ‘ஆன் நல்வெள்ளூர்தியான்’ என்றதன் நோக்கம் உணரத்தக்கது. எப்படி இறைவன் வெள்ளிய ஆன் நல்லேற்றில் விரும்பியுறைகின்றானோ அதேபோல் அவ்வானின் பசுஞ்சாணத்தை நீற்றி அதனின்றும் எடுத்த பால் வெண்ணீற்றையணியும் அடியார்களிடத்திலும் விரும்பி நீங்காது இனிதுறைவான் என்பது கருத்தாகும். திருவைந்தெழுத்தை ஓதிக்கொண்டே திருநீறு அணிவதும், திருநீறு அணிந்தே திருவைந்தெழுத்தை எண்ணுதலும் முறையாகும். அவ்விரண்டும் சிவ விளக்கத்திற்கு இன்றியமையாதவை. இக்கருத்துப்பற்றியே “மந்திரமாவது நீறு” என்றதும்.

(வரும்)

உ

பௌட்கரவிருத்தி உரைப்பாயிரம்

य श्शाक्त्या क्षोभ्यमायायुगळपरिणतिं भोग्यजालं तदीयै
र्देहाद्यै र्भोजयित्वा त्रिविधमणुगणं कर्मवाञ्छानुरूपम् ॥
शक्तिं पक्वाणवेऽस्मिन्तदनु करूणया पातयन्बन्धमोक्षं
कुर्वन्दीक्षाख्यशक्त्या स्फुटयति शिवतां पातु सोऽयं शिवो नः ॥

—உமாபதிசிவாசாரியார்.

(இதன் மொழிபெயர்ப்பு, 152-ம் பக்கம் காண்க.)

உ
சிவமயம்

# திருநெறி விளக்கம்

[திரு. மு. அருணசலம் அவர்கள் M. A., சென்னை]

எத்தனையோ பழைய தமிழிலக்கண இலக்கியங்கள் இறந்து போயின வென்பது தொல்காப்பியம் முதலிய இலக்கணங்களின் உரைகளாலும், சிலப்பதிகாரம் முதலிய இலக்கியங்களின் உரைகளாலும் தெரிய வருகிறது. இவற்றைப்போலவே சித்தாந்த சாத்திர நூல்கள் பல இறந்துபோயின என்று மதுரைச் சிவப் பிரகாசர், மறைஞான தேசிகர், சிவாக்கிர யோகிகள் முதலிய சாத்திர உரையாசிரியர்கள் எழுதுவனவற்ருல் தெரிய வருகிறது. இவ்வாறு இறந்துபோன சித்தாந்தச் சிறுநூல்களில் **திருநெறிவிளக்கம்** என்பதும் ஒன் றெனக் கருதவேண்டியிருக்கிறது.

மெய்கண்ட சாத்திரங்களிலே முதனூலாகிய **சிவஞான போதம்** சூத்திரங்களாகிய சிறுநூல். அதன் வழிநூலாகிய **சிவஞான சித்தியார்** மிகவிரிந்தநூல். சார்பு நூலான **சிவப்பிரகாசம்** நூறு திருவிருத்தங்களாலானது. இந்நூல் தோன்றிய காலந் தொட்டு இது ஓர் பாராயண நூலாக இருந்து வந்திருக்கிறது. பல சிவஞானிகளும், அடியார்களும் இந்நூலைப் பெரிதும் போற்றி, இதன் செய்யுட்களுக்குக் கருத்தை விளக்கும் கொளு, அடி வரவு முதலியவற்றைச் செய்திருக்கிருர்கள்.

உமாபதி சிவாசாரியார் சிவப்பிரகாசத்தைச் செய் தது கி. பி. 1306ல்; அதாவது 14-ம் நூற்ருண்டின் தொடக்கத்தில். அதே நூற்ருண்டின் இறுதியில் வாழ்ந்த சீகாழிச் சிற்றம்பல நாடிகள், சிவப்பிரகாசச் செய்யுட்களுக்கு அடிவரவும், அதிகார அடைவும் கூறுகிற அகவல் ஒன்று அருளிச் செய்திருக்கிருர்கள். இவ் அகவலையன்றி அடிவரவு உரைக்கும் வேருேர்

அகவலும் பிரதிகளில் காணப்படுகிறது. அடுத்தநூற்றாண்டில், அதாவது 15-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த காழை அம்பல வாணத்தம்பிரான் என்ற பெரியார், சிவப்பிரகாசச் செய்யுட்கள் நுதலிய பொருளைத் தொகுத்து ஒருகலிவெண்பாச் செய்திருக்கிறார். திருக்கோவையாருக்குக் கொளு அமைந்திருப்பது போல, இந்நூற் செய்யுட்களின் கருத்தை விளக்கும் கொளுக்களையும் இவரே செய்தமைத்திருக்கிறார். இருவருட்பயன் குறட்பாக்களின் கருத்தை விளக்கி இவர் உதாரணக் கலித்துறைகள் செய்திருப்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

மற்றொரு பெரியார் சிவப்பிரகாசத்தினிடம் பெரிதும் ஈடுபட்டு, அதைப்போற்றுமுகத்தான், அதே கருத்துக்களைத் தெரிவிக்கும் வேறொரு நூலைச் செய்தார். இதில், சிவப்பிரகாசச் செய்யுள் ஒவ்வொன்றுக்கும் நேரே பொழிப்புரை செய்ததுபோலத் தம் செய்யுட்களை அமைத்தார். இந்தநூலே திருநெறிவிளக்கம் எனப்படுவது. கி. பி. 1488ல் சிவப்பிரகாசத்துக்கு விரிவுரை செய்த மதுரைச் சிவப்பிரகாசர் இந்த நூலிலிருந்து ஐந்தாறு செய்யுட்களை எடுத்தாளுகிறார். அவர் மேற்கோள் காட்டுவதனாலேதான், இப்படி ஒரு சித்தாந்த நூல் இருந்ததென்பதும், இதன் அருமை இன்னவென்பதும் தெரிய வருகின்றன. இந்நூலாசிரியர் யாரென்பது தெரியவில்லை; காழிக்கண்ணுடைய வள்ளலார் இந்நூலைச் செய்தாரென்று சொல்வதுண்டு.

சிவப்பிரகாசம் 16-ம் செய்யுளாகிய 'உலகமெலாம்' என்ற திருவிருத்தத்தின் உரையில், 'அணுக்கள் உரு அடையும் அறிவிலாமையாலும்' என்ற தொடருக்கு, "ஆன்மாக்கள் கன்மத்துக்கீடாக ஒவ்வொரு சரீரங்களை எடுக்குமிடத்து அந்தச் சரீரங்களிலே சென்று பொருந்துகைக்குத் தங்களுக்கென ஓர் அறிவில்லாத படியாலும்" என்று எழுதிவிட்டு, 'அணுக்கள்'

என்ற சொல்லுக்கு 'ஆன்மாக்கள்' என்று பொருள் கொண்டதற்கு மேலே ஆதாரங் காட்டுகிறார்கள். "அணுக்கள் என்பது ஆன்மாக்களென்பதே இந்தப் பதத்துக்குச் சொல்லப்படு மென்பதற்கு, இந்நூலைப் பின் சென்ற நூலாகிய திருநெறிவிளக்கத்திலும், இந்த விருத்தத்துக்கு எதிரிடை விருத்தமாகிய,

"வையமெலாம் ஆண்பெணலி என்னத் தோன்றி
வல்வினையால் உழன்றொடுங்கி மலத்தாற் பின்னும்
மெய்யணையும் வெகுவிதரூ பங்கள் மாறி
விடுவதுபற் றுவதாகி விரித லானும்
பொய்யணைய மாயைசட மாத லானும்
போதம்உரு அறிந்துபொருந் தாமை யானும்
செய்வினைசெய் துயிருருவில் நிற்ற லானும்
செகமுழுதும் நின்றுசிவன் செய்வன் காணே."

என்னுமிதில், 'போதம்உரு அறிந்து பொருந் தாமையானும்' என்ற பதத்தை அணுக்கள் உரு அடையும் அறிவிலாமையானும்' "என்றபதத்துக்குக் கண்டுகொள்க" என்றெழுதுகிறார். சிவப்பிரகாசத் துக்கு உரை எழுதும்போது பிற்பட்ட நூலை ஆதார மாகக் கொள்ளுதல் பொருத்தமாகுமா என்ற ஆசங்கை ஏற்படக்கூடும் என்பதை எதிர்பார்த்து, அவர்மேலுங் கூறுகிறார்; "இந்தத் திருநெறிவிளக்கம் பின்னூலா யிருக்க, இதனை எதுக்காட்டிய தேதென்னில், இந்த நூல் சிவப்பிரகாசத்துக்குப் பின்சென்ற நூலாகையால், சத்தம் வேறுபட்டும் அத்தம் ஒன்று பட்டும் வருகை யாலே அது காட்டவேண்டியதென அறிக."

இவ்வாறு திருநெறிவிளக்கச் செய்யுள் ஒவ் வொன்றும் சிவப்பிரகாசச் செய்யுளொன்றை அடி யொற்றி அமைந்தது என்று பலவிடங்களில் கூறுகிறார்.

"மெய்யாதி நால்வகையாய் ஒன்றுக்கொன் றுருவா
வெருவிதமாய் ஏகமாய் வீதலகன் றருவாய்
எய்யாமல் வினையிலுழல் ஆருயிர்கள் எவைக்கும்
இருப்பாகி அசேதனமாய்ச் சலிப்பிலதாய்த் தனது
பொய்யாய நிலையளவும் பூரணமாய் யாவும்
பொருந்தஅடை வேபுரிந்து பொருந்திவினை யொன்றும்
செய்யாத விறுகாலஞ் சேதனங்கட் கெல்லாம்
சேர்விடமாம் மாயையெனச் செப்பும் நூலே."

என்பது 'உருவாதி சதுவிதமாய்' என்ற 22-ம் செய்யுளுக்கு நேரானது.

"எண்ணியகன் மேந்திரியம் என்றுசொல்லப் பட்ட
இராசதமார் வாக்காதி எய்திடும்வை காரி
நண்ணியிடும் பூதாதி தாமதன்மாத் திரையால்
நவிலுறுசத் தாதியினை நல்கியிடும் சத்தக்
கண்ணதனில் வெளிபரிசங் காலுருவந் தன்னில்
கனல்இரத்த தேபுனல்நற் கந்தத்தே தரையா
மண்ணிறுதி கலைமுதலா வந்தவகை மடங்கும்
மாலயனு திகள்வடிவும் வந்தமைபோல் ஒடுங்கும்."

"தொல்குரம்பை காரணமாய்த் தொகையளவு படாத
துன்பமுடன் இன்பமாய்த் தோற்றமுடன் ஈறு
மல்கியிடும் வழியதனுல் நித்த மாகி
மன்னுயிர்கள் தொறும்மருவிப் பின்னும் மற்றுப்
பல்விதமாய் உரைநினைவு தொழிலாற் செய்யும்
பண்பினதாய்ப் புத்தியினில் வந்தமையும் பான்மை
நல்வினை தீ வினையாகிக் கடைநாள் மாயை
நண்ணியிடும் இதுகன்மம் நாட்டில் அன்றே."

என்ற இவ்விருபாடல்களும் சிவப்பிரகாசம் 27, 28-ம் திருவிருத்தங்களுக்கு நேரானவை.

பற்றிய நிறங்க ளாகும் பளிங்கின தொளியும் பற்றி
நிற்றலை யளிக்கும் வெய்யோன் நீடொளி யதுவும் போல
முற்றுல கதற்குச் சார்வாய் முற்றினும் முந்நீர் வின்போல்
சித்தினிற் சடங்கள் தோயா என்பர்சிற் சத்தி தோய்ந்தோர்.

"பூசுரர்க் கடிய சத்தன் தன்னிடைப் பொருந்தல் போல
ஈசன தருளு யிர்ப்பால் எய்தலால் இவனே யாவும்
மாசற அறியு மென்றும் ஐந்தொழில் புரியு மென்றும்
பேசுதல் உண்மை ஞானம் அன்றிது பிராந்தி ஞானம்.

என்ற இருபாடல்களும் முறையே 69, 76-ம் திருவிருத்தங்களுக்கு நேரானவை.

மதுரைச் சிவப்பிரகாசர் உரையால் இத் திருநெறி விளக்கச் செய்யுட்கள் ஆறும் கிடைக்கின்றன. இவற்றின் போக்கைப் பார்க்கும்போது, இந்நூலும் சிவப்பிரகாசத்தைப் போலவே நூறு செய்யுட்களையுடையதென்றே கொள்ளலாம். மேற்காட்டிய ஆறு பாடல்களே இப்போது கிடைப்பன; நூல் முழுதும் இதுவரை கிடைக்கவில்லை; நூல்தோன்றிய காலம் 14 அல்லது 15-ம் நூற்றாண்டாகும்.

---

யாவனரு ளாற்கலங் கிருமாயை யின்றிரி
பெனும்போக் கியத்தி ரளினை
இருவினை விரிப்பினுங் கிசையவாம் மாயைகளி
னெய்துமுட லாதி யாலே
மூவகை யுயிர்க்குமுவை யூட்டிப்பி னறிவெலா
மூடுமல பக்கு வந்தான்
முன்னுசிவ புண்ணியத் தெய்துமுயி ரறிவிலே
முதிரருட் சத்தி தன்னை
மேவுற வெளிப்படுத் துயர்தீக்கை யாம்பெயர்
விரவிதன் சத்தி யாலே
வேரொடுங் கட்டெலாம் விடுவித்து மேதக
விளங்குமெண் குணங்க ளாய
பாவனா சிவத்துவம் விளக்கியருள் செய்யுமிப்
பண்பினோன் பரம சிவனும்
பன்னுமல னடியோமை யெந்நாளு மிடர்வந்து
படராது காக்க மன்றே.

(மொழிபெயர்ப்பு.)

உ
சிவமயம்

# குரு ஞானசம்பந்தர்

[திரு. S. தண்டபாணி, ஆதீனத் தேவாரப்பாடசாலை மாணவன்.]

பெண்ணைப் புனல்சூழ் வெண்ணைமெய் கண்டான்
திருமர புலகிற் றிகழ்ந்திடத் தோன்றித்
தருமையுங் கமலையும் விரிதமிழ்க் கூடலும்
திருநக ராக வரசுவீற் றிருக்கும்
நற்குரு ராச ஞானசம் பந்தன்
பொற்பத மனனுறப் புரிவோர்க்கு
அந்தமி லின்பந் தழிவில்வீ டெளிதே.

தண்ணார் தமிழளிக்குந் தென்பாண்டி நாட்டிலே, ஸ்ரீ வில்லிப்புத்தூரில் சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்கச் சுப்பிரமணிய பிள்ளையும், மீனாக்ஷியம்மையும் செய்ததவப்பயனால் அவருக்குக் குமாரராகத் திருவவதாரஞ் செய்தருளியவர் குருஞானசம்பந்த தேசிகராவார். இவர் சைவ வேளாளகுலத்தினர். இளமையிலேயே வடமொழிக் கல்வியும், தென்மொழிக் கல்வியும் ஒருங்கு கைவரப் பெற்றவர்.

ஒருநாள் இவரதுதாய்தந்தையர்கள் மதுரைச்சோமசுந்தரக்கடவுளைத் தரிசிக்க இவரையும் உடன் அழைத்துக்கொண்டு மதுரைமாநகருக்குச் சென்று, அங்குச் சிலநாள் சுவாமி தரிசனம் செய்துகொண்டிருந்தார்கள். ஊருக்குத் திரும்பிச் செல்லவேண்டுமென்று விருப்பங் கொண்ட தாய்தந்தையர்கள் தம் குமாரரையும் ஊருக்கழைக்க, அதற்கவர் "அங்கயற்கண்ணி தன்னொடு மமர்ந்த ஆலவாய் அண்ணலாகிய எம்பெருமானுடன் இருப்பதன்றி கணப்பொழுதி லழிந்தொழியும் உடலையுடைய உங்களுடன் வரேன்" என்று மறுமொழி பகர்ந்தனர். தம் புதல்வனை விட்டுப் பிரிய மனமில்லாத பெற்றோர்களும் ஒருவாறு மனந்தேறி அங்கேயே விட்டுவிட்டுத் தம்மூருக்குச் செல்வாராயினர்.

ஞானசம்பந்தர் நாடோறும் பொற்றாமரைத் தடாகத்தில் நீராடி, நித்திய கடன்களை முடித்துக்கொண்டு சுவாமிதரிசனம் செய்துவந்தார். ஒருநாள் அன்புமீதூரச் **சொக்கநாத வெண்பா**வெனும் ஒருபாமாலை பாடி இறைவர்க்குச் சாத்தினார். பின்னொரு நாள் பொற்றாமரைத் தடாகக்கரையில் அடியார்கள் பலர் சிவபூஜை செய்துகொண்டிருந்தலைக் கண்ணுற்று அதில் தானும் விருப்புடையராய், சோமசுந்தரக்கடவுளிடம் விண்ணப்பித்துக்கொண்டார். தமது கனவிற்றோன்றி ஆக்ஞாபித்தபடி அவர் மறுநாள் பொற்றாமரைத் தடாகத்தில் மூழ்கிப்பார்க்க, அப்போது அவரதுகையில் சிவலிங்கம் ஒன்று எழுந்தருளியாயிற்று. உடனே ஞானசம்பந்தர் மனமிகமகிழ்ந்து ஆனந்தக் கூத்தாடி அதனைப் பூசித்துச் சோமசுந்தரக் கடவுளைத் தரிசித்துச் **சொக்கநாதக் கலித்துறை** என்னும் ஓர் நூலையும் பாடி அருளினார். அந்நூலின் முதற்பாடல் இங்கு தரப்படுகிறது.

> கண்ணுக் கினிய பொருளாகி யேயென் கரத்தில் வந்தாய்
> விண்ணும் பரவிடு மற்புதமே யென்ன விஞ்சை யிதான்
> மண்ணும் புகழ்ந்திட வென்னையும் பூரண வாரியுள்ளே
> நண்ணும் படிசெய் மதுரா புரிச்சொக்க நாயகனே.

பின்னர் இறைவனை நோக்கி "வேண்டுவார்க்கு வேண்டியதை விரும்பியளிக்கும் வள்ளலே! இவ்விலிங்கத்தைப் பூசித்தற்குரிய சிவஞானோபதேசம் செய்தருளுதற்கு ஓர் குருமூர்த்தியையும் காட்டியருள வேண்டும்" என்று விண்ணப்பித்தார். அன்றிரவே இறைவன் கனவிற்றோன்றி "ஞானசம்பந்தா! ஆரூர் சென்று ஞானப்பிரகாச தேசிகனிடத்தில் ஞானோபதேசம் பெறுவாய்" என்று கட்டளையிட்டு அவ்வாறே ஞானப்பிரகாசரது கனவிலுந்தோன்றி "நமது ஞானசம்பந்தன் உன்னிடம் வருவான். முறைப்படி சிவஞானோபதேசம் செய்விப்பாய்" என்று கட்டளையிட்டு மறைந்தருளினார்.

(வரும்)

# Siddantha Saivam And Its Merits

*Sri A. Muthiah Pillai, B.A., B.L., Palamcottah.*

[Continued from page 207 Malar-I.]

Having its origin in God Himself and holding that there is nothing without Him, it does not deride any other religion. Its principle is that every religion has its place in the realisation of God and His unique relation with the souls. When Saivam holds that there is only one God and He is all absorbing, all pervading and without Him not even an atom changes its position, how can it postulate otherwise ? In our Tamil country religious observances of ancient times have a stronger hold on women who have not merged themselves in material civilisation than on men who have consciously or otherwise mostly lost their inherited qualities.

A great Tamil Saint says that *" though a person with his limitations in knowledge propounds a new religion distinct from world with a vengence, it is acceptable to my Lord Siva." If the world now turn to pieces by colour prejudices, political disabilities, economical difficulties and religious quarrels, it

---

* விரிவிலா அறிவி னார்கள் வேறொரு சமயஞ் செய்து
எரிவிற் சொன்னா ரேனும் எம்பிராற் கேற்ற தாகும்

என்ற திருப்பாசுரக் கருத்தை யொட்டி எழுந்தது.

wants a common religion to cement the differences, so that peace, plenty, and prosperity may shine on all alike; Saivam can supply the want. What else than love can unite together the various nations of the world? Saivam which is the religion of love can accomplish this. It is often urged that the great Tamil Saint Tiru Gnanasambandha persecuted or helped to persecute the Jains at Madura. This is merely a confusion of facts. The Saint's demonstrations were concerned only with the religious dispute; whereas the cause of the sacrifice of lives was political expediency. The attempt to burn out the Saint, though failed, ended in the restribution of justice. Nothing more! religious persecution is outside the pale of Saivam, and its principle of toleration has never been affected at all.

Saivam says that every religion is a necessary step and it is even inevitable as the souls bound in ignorance have to pass through several stages in the onward progress and whatever be the way in which you worship God, He will surely appear to you, but He who appears to you is only my Lord Siva who is Umamaheswara

Saivam does not postulate an eternal hell. Common sense does really revolt against this. Duration of human life in this world is nothing against eternity. Punishment of the same kind for all crimes irrespective of their seriousness cannot appeal to a reasoning mind. But Saivam holds every action of man must have its consequences, and every soul reaps the result of its action according to their merits, but finally

reaches the goal of salvation. Salvation may be in the near feature or after innumerable births. But it is certain that every soul will reach the final goal and will not be left in the middle either to suffer eternally for its bad deeds or to enjoy the prevarious bliss for its good deeds for all times to come. The God of love will not neglect any soul in its onward march towards final salvation. This aspect of Saivam is not only consistent with the love of God, but also affords reasonable consolation to the aspiring soul. No soul need feel despondent. Every soul can hope to attain salvation finally.

Caste system is a social organisation. At present it is decided as not conducive to the advancement of a nation. But it exists in one form or another in every part of the world. It may have a different name, though it is equally beneficial or injurious to the society. At present the disadvantages are magnified in order to show that they retard the progress of the nation. It concerns only with the temporal advancement. Nations of the world aspiring to obtain the greatest power and wealth concentrate their attention to this alone. Any amount of worldly power cannot be considered to be the final goal of the human soul. Spiritual development alone can justify the existence of man on earth. Saivam concerns itself with spiritual advancement more than with material progress. So the system which is observed in social life vanishes with the advancement of the religious and spiritual development. A low caste Sanyasi is often honoured and worshiped

by a higher class saivite devotee, when it is found that the said Sanyasi has really made an advance in his religious and spritual attainments Does this not show that Saivam rises above the ordinary conception of social differences in the religious world?

These are not all which distinguish Saivam from other systems. A careful study of the religion will show how its principle deserve a superior place in the gallery of religions.

---

உ

குருபாதம்

## மெய்ந்நூல்

உலகத்திலே பேசப்படுஞ் சமயங்களும் அவற்றின் கொள்கைகளையுணர்த்தும் நூல்களும் ஒன்றோடொன்று மாறுபட்டனவாயுள்ளன. இவற்றுட் சிறந்த சமயம் யாது? சிறந்த நூல் யாது? என வினவின், இது ஆகும், அது ஆகாது என்னும் பிணக்கில்லாமல் எல்லாக் கொள்கையும் தத்தமக்குரிய இடத்தில் முறையாகத் தன்னகத்தே நிற்கப் பெற்றிலங்குவது எச்சமயம், அச்சமயமே சமயம். அச்சமயக் கொள்கைகளைக் கூறும் நூலே மெய்ந்நூல். இச்சமயக் கொள்கைகள் யாவும் மறை, அறிவுனூல் என்ற பொதுச் சிறப்பாய நூல்களுளடங்கி நிற்பன. அந்நூலிருவகையும் இறைவனது அறிவு, சொல் என்னு மாற்றல்களாகிய இரண்டு திருவடிக்கீழடங்கும்.

—சித்தியார்.

# The Four Paths

[ Late J. M. Nallaswami Pillai, B. A., B. L. ]

(Continued from Page 128)

"Ye have not chosen me but I have chosen you-XV 13 to 16."

"That they all may be one, as thou father art in me and I in thee, that they also may be one in us"

"I in them, and thou in me that they may be made perfect in one. XVII 21 and 23."

When I spoke of these higher aspects of Christ's teaching to a missionary, he observed to me that it only struck him lately that fellowship with God was a higher spritual condition than fatherhood of God. Among ourselves, the Madhwa system may be said to be pure Dasamarga. The Ramanuja in its popular aspects, is Dasamarga and Satputramarga and little more. Sankara's system will be Saha marga. But the mistake is made in not understanding that these truths are only symbolic and then they are apt to become dogmatic. I have seen Christian friends contend that God is our real **father**, as Vedantis and Yogis may declaim that there is no other God but the **self**.

A true and universal religion will combine all these various paths and which are required and necessitated by the varying degrees of man's intellectual and spritual development.

And then we will not see the mote in our brother's eye and will live in peace and amity for ever.

I only need quote to you one verse from the Gita where all these four paths are set fourth.

"Therefore with bowing and body bent, I ask grace of thee, Lord and Adorable, as father to son, as friend to friend, it is meet, O Lord, to bear with me as Lover to Loved." I may also observe that Saivaism of to-day which I regard as the true modern representative of the historic religion of the Gita and Mahabharata period combines all these four paths and their great Saints St. Appar, St. Gnanasambandar, St. Sundarar and St. Manickavachakar are regarded as teachers of these four paths.

More than all this, I wish to emphasize the fact that love is the essence of all real Religion, and real worship of God is the worship of God's creatures and loving them one and all without distinction of caste or creed, as observed by Sri Kanta, and unless this is fully recognized and practised no real spiritual progress is possible.

---

# The Sacred Sports of Siva*

Those who read the title may reasonably raise the question: "Is sporting reconcileable with the divine attributes of God?" It will not take long for us to solve it by merely saying "we cannot have an insight into the purposes of God." Such an answer is as easy to be given as it is sure to be slighted. If Divine actions cannot be understood, they should have no place on this earth. If by man God's actions cannot be interpreted, to what purpose are those actions done at all? Not capable of being interpreted, God's actions would become purposeless and therefore vain. But it is man's actions that are so. The sports of God are purposive. They are useful. This is one of the main points of difference between man's sports and the sports of God. It may not be given to us to understand fully or to interpret thoroughly the actions done under divine influence, but it is no reason why we should rush into the conclusion that the sport of God is the work of human fancy. Doubtless, the human mind has shaped it in its own way in describing it later on, but the main outlines which can necessarily fall within the creation of man are still discernible. Although the events described may seem to be common place, there is still running an under current which course the human intelligence seeks in vain to retard, and whose purpose it vainly attempts to understand. To a careful thinker, however, many of such subtle ideas are on the surface.

* Siddhanta Deepika June 1903.

It may not perhaps be out of place here to say a few words regarding the probable dates of the various performances of Siva. The Sports of Siva at Madura are regarded to have been sixty four in number and some of them have been performed by a great devotee of Siva, Gnana Sambantha under divine influence of the Lord of Madura. The majority of them, however, are of Siva and are ascribable to different dates ranging between the prehistoric era and the most recent days of the seventh century. The prominent Tamil work which contains a record of these sports is the **Tiruvilayadarpuranam** composed about the sixteenth century by Paranjoti Munivar of Madura. There is a tradition that work was composed at the instance of Ativirarama Pandya, a Pandyan King, whose time has been fixed to have been the sixteenth century. This Tamil work is professedly a translation from the Sanskrit Halasya Mahatmya. The Sanskrit work could assuredly not have been composed before the 8th or 9th century, for it records events of the 7th century. The original for all kinds of works bearing on the Sacred Sports is only the inscription at the temple of Madura and some manuscripts on the same subject.

## 1. திருப்புள்ளிருக்கு வேளூர்ப் புகழ் மாலை

மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித் தீராநோய் தீர்த்தருளும் ஸ்ரீ வைத்தியநாதப் பெருமானையும், கலியுக வரதராகிய ஸ்ரீ செல்வ முத்துக்குமாரப் பெருமானையும், சைவ சமயாசாரியர், தருமையாதீனம் 10-வது குருமகா சந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சிவஞானதேசிக சுவாமிகள், அருணகிரிநாதர், குமரகுருபரர் முதலிய பல்லோரும் தேவாரம், அருட்பா, திருப்புகழ், பிள்ளைத்தமிழ் முதலிய பல பாமாலை களால் பாடித் துதித்துள்ளார்கள். அம்மாலைகளை எல்லாமக்களும் நாடோறும் படித்துப் பயனடையுமாறு சிற்சில பாடல்களைத்திரட்டிச் சிறு நூலாகப் புகழ்மாலை என்னும் பெயருடன் சென்னைத் திருவாளர் M.S.A.R. அருணாசலம் செட்டியார் அவர்கள் பதிப்பித்துள்ளார்கள். 51-பாடல்கள் அடங்கியது. (வேண்டுவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு முக்காலணா தபாற்றலை அனுப்பி விலையின்றிப் பெற்றுக் கொள்ளலாம்,)

**M.S.A.R. அருணாசலஞ்செட்டியார்,**
"ஸ்ரீ முத்துக்குமார்" சரவணமுதலியார்தெரு,
தியாகராஜநகர், சென்னை.

தருமபுரஆதீன வெளியீடு எண் 53.

## திருக்கற்குடித் தலவரலாறு

வருங்காலன் றுயிரை மடியத்திரு மெல்விரலால் பெருபாலன் றனக்காய் பிரிவித்த பெருந்தகை எழுந்தருளியிருக்கும் திருக்கற்குடிப் (உய்யக்கொண்டான்) பதியின் பெருமையை மக்கள்யாவரும் எளிதில் நன்குணர்ந்து இறைவனை வழிபட்டு உய்யும்வண்ணம் இவ்வசன நூல் எழுதப்பட்டுள்ளது. மூர்த்தி தலம் தீர்த்தங்களின் பெருமைகள், சரித்திர வரலாறுகள், கல்வெட்டுக் குறிப்புகள் முதலிய பல பிரிவு களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றையும் நன்கு விளக்கப்பட்டிருக்கிறது. இறுதியில் திருமுறை பாடல்களும் பிறவும் சேர்க்கப் பட்டுள்ளன,

தனிப்பிரதி விலை அணா 0—3—6 | தபாற்கூலி ரூ 0—0—9

வேண்டுவோர் அடியிற்கண்ட முகவரிக்கு தபாற்றலை அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

**ஸ்ரீ மௌன சுவாமிகள்**
மலைக்கோட்டை, தெப்பக்குளம் P. O.
திருச்சி.

குருபாதம்

# தருமபுர ஆதீன வெளியீடுகளின் விலைப்பட்டி

| வெளியீடு நெ. | | விலை. அ. பை. | அஞ்சற் செலவு அ. பை. |
|---|---|---|---|
| 39 | புள்ளிருக்கு வேளூர்ப் புராணம் | [illegible] | [illegible] |
| 40 | சித்[illegible]த சைவ வினாவிடை | 3—6 | 1—9 |
| 41 | நால்வர் சரித்திரமும், அற்புதத் தேவாரத்திரட்டும் | 2—0 | 1—3 |
| 42 | ஆச்சாள்புரம் கோயில் வரலாறு | 1—6 | 0—9 |
| 43 | திருவையாற்றுக் கோயில் வரலாறு | 2—6 | 0—9 |
| 48 | திருக்கடவூருலா (குறிப்புரையுடன்) | 4—0 | 1—6 |
| 51 | சீகாழித் தலவரலாறு | 2—9 | 0—9 |
| 52 | மெய்கண்ட சாத்திரம் (ராப்பர்) | 8—0 | 3—0 |
| 53 | திருக்கற்குடித் தலவரலாறு | 3—6 | 0—9 |

இப்புத்தகங்கள் வேண்டுவோர் அடியிற்கண்ட முகவரிக்கு மு[illegible] பணமனுப்பிப் பெற்றுக் கொள்ளவும். எல்லாரும் எளிதில் பெற்[illegible] படித்துணர வேண்டுமென்ற கருத்தில் குறைந்த விலைக்குக் கொடுக்கப்ப[illegible] தால் மணியார்டர் மூலமாவது, தபாற்றலைகள் மூலமாவது அஞ்சற்ச[illegible] உள்பட அனுப்பிப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

முகவரி:- டெஸ்பாட்சிங் கிளார்க்
தருமபுர ஆதீனம்,
தருமபுரம், மாயவரம் P. O.

Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adheenam at The Gnanasambandam Press, Dharmapuram. (Mayavaram).